**குருணாகல் மாநகர சபை**
**குருணாகல் மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 ஜுன் 11 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை ஜுலை 31 ஆந் திகதியும் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குருணாகல் மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் வாகனக் கொள்வனவு ரூபா. 5,263,360 ஆகவிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா. 6,361,482 எனக் காட்டப்பட்டிருந்தது. | வாகனக் கொள்வனவுகளை உரிய முறையில் ஆவணப்படுத்தி கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் ரூபா. 6,361,482 எனப் பெறுமதி குறிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதியினை நிலையான சொத்துக்கள் பட்டியலில் சேர்க்கப்படாத 04 டிராக்டர் டேலர்களின் பெறுமதி வெவ்வேறாக சொத்துக்கள் பட்டியலில் சேர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கியமையைக் குறிப்பிடுகிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்குச் சொந்தமாகவிருந்த 32 கைத் தள்ளு வண்டிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2018 திசெம்பர் 31ஆம் திகதி கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்காத | கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தம் | குறித்த பொருட்கள் இதுவரை நகர சபைக்குக் கிடைக்காத |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 3,175,236 பெறுமதியான சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் கடன் கொடுத்தோர் நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்படாத பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக கடன் கொடுத்தோர் நிதி ஒதுக்கப்படு வதற்கான நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது. | அதேவேளை குறித்த ஒதுக்கீடுகளை நீக்கிவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான 2019 ஜனவரி மாதத்தில் நீர் கணக்கு மற்றும் பஸ் தரிப்பு நிலையக் கணக்கின் மூலம் முறையே ரூபா. 5,664,044 மற்றும் 175,826 செலுத்தப்பட்டிருந்த போதும் அக் கொடுப்பனவுகளுக்காக மீளாய்வாண்டில் கடன் கொடுத்தோர் நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் கொடுத்தோர் சரியாக இனங் காணப்பட்டு கணக்கிடு வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படாத தவறினை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய அங்கத்தவர் கொடுப்பனவு ரூபா. 1,305,000 நிதிக்கூற்றுக்களில் ரூபா. 870,000 எனக் காட்டப்பட்டிருந்தது. | கணக்குகள் சீர்செய்யப்படல் வேண்டும். | அங்கத்தவர் கொடுப்பனவு நிதிக் கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்ட குறையினை நிவர்த்தி செய்வேன். |
| (ஊ) | நீர் வருமானப் பட்டியல் ரூபா. 94,716,039 ஆகவிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா. 93,748,287 எனக் காட்டப்பட்டிருந்தது. | மாதாந்தம் விநியோகிக்கப்படு கின்ற நீர்ப் பட்டியலின் கட்டண கூட்டுத் தொகை வருடாந்த பட்டியலாகும். ஆதன்படி வருமானத்தினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீர் பட்டியல் படுத்தலில் பல்வேறு காரணங்களினால் மாற்றங்கள் ஏற்படலாம் என்பதைத் தெரிவிக்கின்றேன். |
| (எ) | உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பொபிகட் இயந்திரத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் பெறுமதி உறுதி செய்யப்பட்டு கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த பெறுமதிகள் 2019 ஆம் ஆண்டினுள் கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் நிலுவை நீர் வருமானம் ரூபா. 38,523,337 ஆகவிருந்த போதும் வருமானப் பிரிவினால் கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ரூபா. 34,905,271 ஆகவிருந்தது. | குறித்த மீதிகளின் மாற்றங்கள் சீர்செய்யப்பட்டு கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நகரக் கணக்காளர் வருமானம்/நகரப் பொறியியலாளருடன் கலந்தாலோசித்து எதிர்பார்த்த பதிலினை அனுப்புவதற்கான நடவடிக்கை எடுப்பதாகக் |

| | | | |
|---|---|---|---|
| | | | குறிப்பிடுகிறேன். |
| (ஐ) | வருமானப் பிரிவினால் கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மீளாய்வாண்டினுள் திரட்டப்பட்ட நீர் வருமானம் ரூபா. 97,775,425 ஆகவிருந்த போதும் சுருக்க வருமான ஆவணத்தின் படி ரூபா. 93,193,107 ஆகவிருந்தது. | குறித்த மீதிகளின் மாற்றங்கள் சீர்செய்யப்பட்டு கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நகரக் கணக்காளர் வருமானம்/நகரப் பொறியியலாளருடன் கலந்தாலோசித்து எதிர்பார்த்த பதிலினை அனுப்புவதற்கான நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிடுகிறேன். |
| (ஒ) | வுாகன ஆவணத்தின் அடிப்படையில் மோட்டார் வாகனங்கள் மற்றும் இழு வண்டிகளின் பெறுமதி ரூபா. 234,748,938 ஆசவிருந்த போதும் நிதிக்கூற்றுக்களின் பெறுமதி ரூபா. 173,135,254 ஆகவிருந்தது. | வுாகனங்களை முறையாக ஆவணப்படுத்தி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வுாகனங்களை மீள் மதிப்பீடு செய்து எதிர்வரும் வருடத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிடுகிறேன். |
| (ஓ) | வைப்பு ஆவணங்களின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியில் விலை மனு வைப்பு, வருமானத்திற்கான வைப்பு மற்றும் பல்வேறு வைப்பு மீதிகள் முறையே ரூபா. 1,814,760 மற்றும் 20,783,827 மற்றும் 12,099,828 ஆகவிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் அம் மீதிகள் முறையே ரூபா. 3,628,865 மற்றும் 28,747,579 மற்றும் 5,455,283 எனக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களின் மீதிகள், ஆவணங்களின் படி மீதிகளுடன் ஒப்பிடப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். | விலைமனு கட்டுப்பண வைப்பு, வருமானத்திற்கான வைப்பு மற்றும் பல்வேறு வைப்புகளுக்காக 2018.12.31 ஆம் திகதியன்று ஆவணங்களின் சரியான மீதிகளின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஔ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற 6 நிதித் தலைப்புகளுடன் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்பான பேரேடுகளில் காணப்பட்ட மீதிகளுக்குமிடையில் ரூபா. 102,598,561 இணக்கமின்மை காணப்பட்டது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தினை ஒப்பிட்டு கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் | 2019 ஆம் ஆண்டு சீர் செய்வதாகக் குறிப்பிடுகிறேன். |
| (க) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பேரேட்டின் அடிப்படையில் கலப்பு வைப்புகளின் பெறுமதி ரூபா. 11,114,800 ஆகவிருந்த போதும் குறித்த ஆவணத்தின் அடிப்படையில் அத் தொகை ரூபா. 7,244,316 ஆகவிருந்தது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தினை ஒப்பிட்டு கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் | 2019 ஆம் ஆண்டு சீர் செய்வதாகக் குறிப்பிடுகிறேன். |
| (கா) | குறித்த சாட்சிகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக | கணக்கு மீதிகளை உறுதி செய்யும் | பொருட் பரிசீலனை அறிக்கைகள், |

| | | |
|---|---|---|
| மொத்தம் ரூபா. 317,551,164 ஆகவிருந்த 14 நிதி விடயங்ளைள் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் அவதானிக்க முடியவில்லை. | ஆவணங்கள், பேரேடுகள் மற்றும் குறித்த சாட்சிகள் முன்வைக்கப்படல் வேண்டும். | நிலையான வைப்புப் பேரேடுகள், ஊழியர் கடன் பேரேடுகள் ஆகியவற்றுக்கு மேலதிகமாக ஏனைய அனைத்து ஆவணங்களையும் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளளேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 247 (அ), (ஆ), (இ) பிரிவுகள் | சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட வரி அறவிடப்பட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பில் வருடாந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு குறித்த கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மாநகர சபை அதிகாரச் சட்டத்தின் பிரமாணங்களுக் கு அமைவாக செயற்படல் வேண்டும். | பணமாகவும் சிட்டைகள் வருடாந்த ஆய்வினை மேற்கொண்டு ஆவணங்களை இற்றைப்படுத்தி பராமரிக்குமாறு நகரக் கணக்காளர், வருமானப் பரிசோதகர்கள் மற்றும் விடயப் பொறுப்பு அதிகாரிகளை அறிவூட்டுவதாகக் குறிப்பிடுகிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 281,518,678 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 212,024,949 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 174,446 | 176,342 | 179,193 | 82,495 | 160,900 | 167,197 | 162,305 | 85,347 |
| (ii) | வாடகை | 76,456 | 70,803 | 74,723 | 12,220 | 80,630 | 71,123 | 67,977 | 16,139 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 16,152 | 20,107 | 20,107 | - | 14,705 | 15,914 | 15,914 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 409,862 | 476,761 | 472,077 | 104,224 | 413,147 | 336,470 | 268,771 | 99,540 |
| | மொத்தம் | 676,916 | 744,013 | 746,100 | 198,939 | 669,382 | 590,704 | 514,967 | 201,026 |

### 2.2.2 வரி மற்றும் வீதவரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 வீதவரிப் பிரிவுகளுடன் தொடர்பாக மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 74,489,507 ஆக இருந்ததுடன் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா. 42,872,002 ஆகவிருந்தது. இது வருடாந்த பட்டியல்படுத்தலில் 57 வீதமாக இருந்ததுடன் இதனுள் 25 அரச சொத்துகள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா. 3,737,010 மீதியும் அடங்கியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவையில் ஒரு வருடத்திற்கும் அதிகமான மீதி ரூபா. 26,936,893 காணப்பட்டது. | குறிப்பிட்ட காலத்தினுள் வரியினை அறவிடுவதற்கும் சட்டத்தின் பிரமாணங்களுக்கு அமைவாக நிலுவைகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவையினை அறவிடுவதற்காக மீண்டும் சொத்துக்களுக்கான தடை விதிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அரச சொத்துக்களுக்கான நிலுவைகளைச் செலுத்துவதற்கான நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நீர் வருமானம் ரூபா. 38,523,337 ஆகவிருந்ததுடன் இதில் ரூபா. 100,000 இற்கு அதிகமான நிலுவை காணப்பட்ட 22 பாவனையாளர்களின் ரூபா. 9,266,762 நிலுவை காணப்பட்டது. | குறிப்பிட்ட காலத்தினுள் வருமானத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவை நீர் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய அதிஷ்ட லாபச் சீட்டு கூட வாடகை மற்றும் உல்லாசப் பயணிகள் வாடகை வருமானம் ஆகியவற்றின் கூட்டுத்தொகை ரூபா. 2,647,128 அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காலத்தினுள் நிதி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவை அதிஷ்ட லாபச் சீட்டு கூட வாடகையில் ரூபா. 296,259.13 தொகை 2019.06.10 அன்று அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் வெஹெர புதிய கட்டடத் தொகுதியின் 05 கடைகள் தொடர்பிலான ரூபா. 50,000 கடை வாடகை நிலுவையும், குருனாகல் புதிய கட்டடத் தொகுதியின் 45 கடைகள் தொடர்பிலான ரூபா. 482,500 கடை வாடகை மற்றும் 49 கடைகளுடன் தொடர்பான ரூபா. 260,010 சேவைக் கட்டண நிலுவை காணப்பட்டது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் வாடகை மற்றும் நிலுவை வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வுாடகை அறவிடப்படாத கடைகளுக்காக வழக்குத் தொடர்வதற்காக சட்ட அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | குருனாகல் பஸ் தரிப்பிடக் கடைகள் 49 இல் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா. 509,968 ஆகவிருந்ததுடன் நிலுவையாகவிருந்த முன்னைய கட்டணத் தொகை ரூபா. 41,400 ஆகவிருந்தது. | குறித்த காலத்தினுள் நிதி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவையினை அறவிடுவதற்காக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஈ) | மீளாய்வுாண்டின் இறுதியில் ரஜபிஹில்ல மற்றும் ரன்தலிய வாடி வீடுகள் இரண்டிலும் ரூபா. 6,367,256 வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓப்பந்தத்தின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ரஜபிஹில்ல வாடிவீட்டிற்காக 26RE வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் ரன்தலிய வாடிவீட்டிற்கு அறவிடப்பட வேண்டிய தொகையினை செலுத்துமாறு லங்கா ரெஸ்ட் ஹவுஸ் நிறுவனத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக வருடாந்த ஆய்வினை மேற் கொண்டு நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன், அனுமதிப்பத்திரமும் பெற வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான சரியான பட்டியல் சபையிடம் காணப்படவில்லை. | வருடாந்த ஆய்வினை முறையாக மேற் கொண்டு ஆவணப்படுத்தி வரி அறவிடலுக்கேற்ப பட்டியல்படுத்தப்பட வேண்டும். தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறையில் கணினி மயப்படுத்தப்படல் வேண்டும். | 2016 ஆம் வருடம் முதல் வியாபார அனுமதிப்பத்திரம் தொடர்பான சகல நடவடிக்கைகளும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதுடன், எழுத்து மூல ஆவணங்கள் பேணப்படுவதில்லை. |

### 2.2.5 ஏனைய வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டிள் இறுதியில் மலசலகூட கட்டணங்கள் தாமதப் பணம் ரூபா 110,000 தொகை, சிம் அட்டை விற்பனை, சுற்றுலா வாடகை, மற்றும் லொத்தர் கூடங்களுக்கான தாமதக் கட்டணங்கள் ரூபா 273,430 அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றுலா வாடகை மற்றும் லொத்தர் கூடங்களுக்கான தாமதக் கட்டணங்கள் நிலுவை பணமான ரூபா 264,712 தொகையில் 2019.06.10 உள்ளவாறு ரூபா 29,626 தொகை அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் கட்டணம் ரூபா 277,250 மற்றும் சிம் அட்டை விற்பனை நிலையக் கட்டணம் ரூபா 630,555 அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 2.2.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா. 36,616,288 ஆகவிருந்தது. | பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பேறப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தினை தீர்த்துத் தருமாறு குறித்த பிரிவுகளுக்கு வேண்டப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) செயல்நடவடிக்கைத்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வருடாந்ா செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | 2018 ஆம் ஆண்டிற்காக (கைத்தொழில் மற்றும் நிர்மாணம்) செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது |

#### (ஆ) நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது போது வருடாந்த பாதீட்டு மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த 81 கைத்தொழில்களுக்காக ரூபா 41,023,254 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பாதீட்டு நிதி ஏற்பாடுகளின் தேவைப்பாட்டிற்கு முன்னுரிமையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையினதும் நகரசபை உறுப்பினர்களினதும் ஆலோசனைகளைக் கருத்திற் கொண்டு இம் மாற்றங்களைச் செய்யப்படுகின்றன. |

**(இ) திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சேதனப் பசளை உற்பத்திக்காக அதிகளவிலான இருப்பொன்று சபையில் காணப்பட்ட போதும் கழிவுப் பொருட்களை நொருக்கு வதற்காக பயன்படுத்தும் ஹலர் இயந்திரங்கள் செயற்படாமை காரணமாக சேதனப் பசளை உற்பத்தி மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உர உற்பத்தி தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு தேவையான வசதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது ஒரு ஹலர் இயந்திரம் செயற்பாட்டு நிலைமையில் காணப்படு வதாகவும் மற்றைய இயந்திரத்திற்கு வலை யொன்று பொருத்து வதற்கும் மோட்டாரை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (ii) | 2010 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிதிஏற்பாட்டின் பேரில் ரூபா 80 இலட்சத்தில் பிளாஸ்ரிக் மீள்சுழ்றசி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பிளாஸ்ரிக் சூடாக்கு வதற்காக 02 இயந்திரங்கள் பொருத்தப் பட்டிருந்த போதும் குறித்த் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 05 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த மையால் செலவிடப்பட்ட செலவினம் விளைவற்றதாக இருந்தது. | தேவைப்பாட்டின் பிரகாரம் இயந்திரங்களை பாவனைக்கு எடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் | பிளாஸ்ரிக் மீள் சுழற்சி செயற் திட்டத்திற்காக கேளவி கோரியிருந்த போதும் குறித்ததுறை தொடர்பான அனுப வமுள்ள மற்றும் கேள்வி தாரர்கள் முன்வரவில்லை. அந்த இயந்திரங்கள் செயற்பாட்டு நிலைமையில் இல்லாமல் இருந்ததுடன் அதற்காக தற்போது விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி முதல் நவம்பர் வரை ரூபா 57,914,422 செலவிடப்பட்டு 2,762,658 மொத்த நீர் அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 618,234 அலகுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தத, அதன் பிரகாரம் 2,144,424 நீர் அலகுகளுக்கான வேறுபாடு காணப்பட்டது. | நீர் மொத்தமாக வழங்குவதை முறைப்படுததி, பட்டியலிடலில் காணப்படும் வேறுபாட்டிற்கு காரணம் கண்டு பிடித்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | மாநகர கணக்காளர் மற்றும் மாநகர பொறியியலாளர் ஆகியோருடன் கலந்தாலோசித்து பதிலொன்று வழங்குவதாக அறிய தருகின்றேன் |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் குறைபாடு மற்றும் மேலதிகம் | | |
| (i) | 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சுகாதார தொழிலாளர்கள், காவலாளிகள் மற்றும் துறைசார் தொழிலாளர்கள் ஆகிய பதவிகளுக்காக 109 பேர் நிரந்தரமாக்கப்பட்ட நிலையில் அச் சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவத் திணைக்களத்தின் பூர்வாங்க அனுமதியின்றி சமயோசித, நாளாந்த அடிப்படையில் 86 ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கையின் பிரமாணங்களின் அடிப்படையில் செயற்படல் வேண்டும் | அத்தியாவசிய சேவைகளை பரவலாக தொடர்ச்சியாக செயற்படுத்துவதனால் அத்தியாவசிய ஊழியர்களை இணைத்துக் கொள்ளுமாறு சபையினால் முன் வைக்கப்பட்ட வேண்டுகோல்கள் மற்றும் ஆலோசனைகளுக்கமைய 2018 ஆம் ஆண்டினுள் நாளாந்தக் கூலி அடிப்படையில் 86 ஊழியர்களை இணைத்துக் கொள்ள வேண்டியேற்பட்டது. |
| (ii) | 2014 மார்ச் 31 ஆந் திகதிய 03/2014 இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவிற்கு மாற்றமாக முகாமைத்துவத் திணைக்களத்தின் பூர்வாங்க அனுமதியின்றி சபையின் அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவிற்கு மேலதிகமான 03 பதவிகளுக்காக 09 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கையின் பிரமாணங்களின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். | அத்தியாவசிய சேவைகளை பரவலாக தொடர்ச்சியாக செயற்படுத்துவதனால் அத்தியாவசிய ஊழியர்களை இணைத்துக் கொள்ளுமாறு சபையினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோல்கள் மற்றும் ஆலோசனைகளுக்கமைய இணைத்துக் கொள்ளப்பட்டனர். |
| (iii) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 04 பதவிகளுக்காக அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக 50 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை போதாத சந்தர்ப்பத்தில் பணிக்குழுவில் மாற்றங்கள் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அத்தியாவசிய சேவைகளை பரவலாக தொடர்ச்சியாக செயற்படுத்துவதனால் அத்தியாவசிய ஊழியர்களை இணைத்துக்கொள்ளுமாறு சபையினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோல்கள் மற்றும் ஆலோசனைகளுக்கமைய 2018 ஆம் ஆண்டினுள் நாளாந்தக் கூலி அடிப்படையில் 86 |

| | | | |
|---|---|---|---|
| | | | ஊழியர்களை இணைத்துக் கொள்ள வேண்டியேற்பட்டது. |
| (iv) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வருமானப் பரிசோதகர் பதவியில் 06 மேலதிகங்கள் காணப்பட்டன. | அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இணைத்துக்கொள் ளள்கள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். | அத்தியாவசிய சேவைகளை பரவலாக தொடர்ச்சியாக செயற்படுத்துவதனால் அத்தியாவசிய ஊழியர்களை இணைத்துக் கொள்ளுமாறு சபையினால் முன் வைக்கப்பட்ட வேண்டு கோள்கள் மற்றும் ஆலோசனைகளுக்கமைய 2018 ஆம் ஆண்டினுள் நாளாந்தக் கூலி அடிப்படையில் 86 ஊழியர் களை இணைத்துக்கொள்ள வேண்டியேற்பட்டது. |
| (v) | 2018 ஆம் ஆண்டினுள் ஆரம்ப தராதர மற்றும் தராதரமற்ற பதவிகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட 39 ஊழியர்களுக்காக 2018 ஆம் ஆண்டினுள் ரூபா. 5,169,954 சபை நிதியினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | அத்தியாவசிய சேவைகளை பரவலாக தொடர்ச்சியாக செயற்படுத்துவதனால் அத்தியாவசிய ஊழியர்களை இணைத்துக் கொள்ளுமாறு சபையினால் முன்வைக்கப் பட்ட வேண்டுகோல்கள் மற்றும் ஆலோசனை களுக்கமைய 2018 ஆம் ஆண்டினுள் நாளாந்தக் கூலி அடிப்படையில் 86 ஊழியர்களை இணைத்துக் கொள்ளவேண்டியேற்பட்டது. |
| **(ஆ)** | **ஊழியர் கடன்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் வேறு நிறுவனமொன்றிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வு பெற்ற, மரணமடைந்த, சேவையை விட்டு வவிலகிய மற்றும் விலக்கப்பட்ட 11 ஊழியர்களிடமிருந்து ரூபா. 623,863 கடன் மீதிகளை அறிந்துகொள்ள முடியாமை மற்றும் தனிப்பட்ட விபரங்களை அறிந்துகொள்ள முடியாமை ஆகிய காரணங்களால் 5 அதிகாரிகளிடமிருந்து ரூபா. 167,751 கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட ல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

**(இ) ஊழியர் பிணை**

| | | |
|---|---|---|
| 31 அதிகாரிகளிடமிருந்து பிணை வைப்பினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சட்டம், விதி முறைகள், பிரமாணங்களுக்க மைய குறித்த அதிகாரிகளின் பிணை வைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப் பிரமாணம் 881 இன் பிரகாரம் பிணை வைப்பு பெறப்பட வேண்டிய பதவிகள் வகிக்கும் அனைத்து அதிகாரிகளிடமும் பிணை வைப்பைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு நகர செயலாளர் / நகர கணக்காளருக்கு அறிவூட்டப்பட்டுள்ளது. |

## 3.4 பெறுகை

### 3.4.1 பெறுகை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் போது நிகழ்ச்சித்திட்ட பாதீட்டு ற்கு அண்மித்த வகையில் பெறுகை திட்டமொன்று தயாரிக்குமாறு மாநாக திணைக்கள தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.4.2 வழங்கலும் சேவைகளும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குருணாகல் பொது நூலகத்திற்கு கெமறா முறைமையொன்றை பொருத்தும் போது CCTV கெமறா பொருத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் பதிவுசெய்த வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோருவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பிரதேசத்தின் தெரிவு செய்யப்பட்ட 03 நிறுவனங் களிலிருந்து மாத்திரம் வெளிப்படை யொன்று இல்லாமல் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. 44 கெமறாக்களுக்கு உரிய ஒப்பந்தக்காரரின் விலை மற்றும் முகவர் நிறுவகத்தின் கூறுவிலைக்கு இடையே | போட்டி கூறுவிலை அடிப்படையில் மேற்கொண்டு சபைக்கு சாதமான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாநகர கணக்காளர் மற்றும் மாநகர பொறியியலாளர் ஆகியோருடன் கலந்தாலோசித்து பதிலொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| ரூபா 88,400 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | | |
| (ஆ) நூலகத்திற்கு பொருத் தப்பட்டுள் CCTV கெமறா முறைமையின் ரூபா 140,000 செலுத்தி பொருத்தியிருந்த நான்கு 32’’ LED TV களில் ஒன்றுக்கு மாத்திரம் உத்தரவாதச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது, அதில் கொள்வனவு செய்யப்பட்ட திகதியாக 2018 செப்தம்பர் 26 ஆந் திகதி என குறிப்பிடப்பட்டிருந்த போதும் குறித்த உடன்படிக்கை 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறிதத் ஒப்பந்தத்திற்கு வர முன்னர் குறித்த செயற்பாடு மேற் கொள்ளப்பட்டிருந்தது. மேலும் பொருத்தியிருந்த 48 கெமறாக்களுக்கு 02 வருட உத்தரவாத காலம் வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பொருத்தப்பட்டிருந்த CCTV கெமறா முறைமையின் கூறுவிலை கோருவதற்குரிய விவரக்குறிப்புக்களுக்கு இணங்காத வகையில் TV மற்றும் வயரிங் கேபல் பொருத்தப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மற்றும் மாநகர பொறியியலாளர் ஆகியோருடன் கலந்தாலோசித்து பதிலொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படு |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்கீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 541/17 இலக்கமும் 1989 ஜனவரி 20 திகதியும் கொண்ட விசேட வர்த்தமானியின் iii பிரிவின் 13 ஆவது விடயத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று அமைக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று அமைக்கப்பட்டு கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2019 ஜனவரி 01 ஆம் திகதி முதல் சுயாதீன னள்ளக கணக்காய்வு பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன் செயலற்றிருந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |